மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இலுப்பூர்

**முன்னிலை: திருமதி. எம்.சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.
2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02ம் நாள் திங்கள் கிழமை

**புதிய இடை நிலை மனு எண். 07/2025**
in
**அசல் வழக்கு எண்.74/2022**

கருப்பையா ..... மனுதாரர்/ வாதி

... எதிர் ...

1.சிவரஞ்சனி

2.கார்னியா

3.அமுசு ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக கடந்த 27.01.2026–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.ராமையா, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.ரெங்கசாமி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

## உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிப்பிடப்பட்ட கூடுதல் ஆவணங்களை குறியிட தக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(3)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

தான் இவ்வழக்கின் மனுதாரர்/வாதி என்றும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமை அறிவிப்பும் அதனுடன் தொடர்புடைய நிரந்தர தடை உத்தரவும் கோரி வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றும், இவ்வழக்கு இன்று வாதியின் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக பட்டியலிடப்பட்டது என்றும், தன் தரப்பில் முதன்மை விசாரணை நடைபெற்ற போது, இவ்வழக்கிற்கு அத்தியாவசியமான முக்கிய ஆவணங்களைப் பெற இயலவில்லை என்றும், அவை தற்போது மட்டுமே கிடைத்துள்ளன என்றும், தற்போது தாக்கல் செய்ய முன்வைக்கும் கூடுதல் ஆவணங்கள் இவ்வழக்கிற்கு மிகவும் அவசியமானவை என்றும், அவற்றை குறியிட அனுமதி வழங்கப்படாவிட்டால், தனக்கு ஈடு செய்ய இயலாத இழப்பும் கடுமையான சிரமமும் ஏற்படும் என்றும், எனவே, மனுவில் குறிப்பிடப்பட்ட கூடுதல் ஆவணங்களை குறியிட அனுமதி வழங்கி தக்க உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:**

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள உ.வி.மு.ச கட்டளை 7 விதி 14(3)ன் கீழான மனுவும், அதனுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும், அவற்றை எல்லாம் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திட்ட வட்டமாகவும், தெளிவாகவும் மறுக்கப்படுகிறது என்றும், அவற்றை எல்லாம் வாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் வழக்கு விசாரணையை காலதாமத படுத்தவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணமானது அவர் வேண்டுமென்று தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு தற்பொழுது தாக்கல் செய்வது வழக்கு விசாரணையை திசைதிருப்பவே தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுவை

அனுமதிக்க சட்டப்படியான எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் கைவசம் வைத்து இருந்து விட்டு தற்பொழுதுத தாக்கல் செய்வதில் நீதிமன்றத்தின் விசாரணை காலதாமதப்படுத்துவதாக உள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

<u>3. பிரச்சனைக்கான தீர்வு</u>

1) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் இந்த மனுவும், மனுதாரர் தரப்பில் முதன்மை விசாரணை நடைபெற்ற போது, இவ்வழக்கிற்கு அத்தியாவசியமான முக்கிய ஆவணங்களைப் பெற இயலவில்லை என்றும், அவை தற்போது மட்டுமே கிடைத்துள்ளன என்றும், தற்போது தாக்கல் செய்ய முன்வைக்கும் கூடுதல் ஆவணங்கள் இவ்வழக்கிற்கு மிகவும் அவசியமானவை என்றும், அவற்றை குறியிட அனுமதி வழங்கப்படாவிட்டால், தனக்கு ஈடு செய்ய இயலாத இழப்பும் கடுமையான சிரமமும் ஏற்படும் என்றும், எனவே, மனுவில் குறிப்பிடப்பட்ட கூடுதல் ஆவணங்களை குறியிட அனுமதி வழங்கி தக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், இம்மனுவுடன் சேர்த்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேலும் இந்த ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய சந்தர்ப்பம் உள்ளதாலும், மேலும் வழக்கு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மனுதாரர் தனது வழக்கை நிருபிக்க ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த

மனுவை அனுமதியளித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மேற்படி ஆவணங்கள் தற்போது காலதாமதமாக மனுதாரர் தரப்பு வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்துள்ளதால், மேற்படி கால தாமதத்தினை ஈடுகட்டும் வகையில் எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் செலவு தொகையா ரூ. 500/– எதிர்மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்னு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.02.02 15:28:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.02.02 15:28:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.